மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம்

# மத்துகம கல்வி வலயம்

## இரண்டாம் தவணை பரீட்சை - 2023

| தரம் 10 | வணிகமும் கணக்கீடும் | பகுதி I | நேரம் - 01 மணி |
|---|---|---|---|

பரீட்சைச் சுட்டெண்.........................................................................................

**அறிவுறுத்தல்கள்**
- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
- 01 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 விடைகளிலிருந்து மிகப்பொருத்தமானதை தெரிவு செய்து கோடிடுக. (1 புள்ளி வீதம் 40 புள்ளிகள்)

- கீழே தரப்பட்டுள்ள நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு 01-40 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்க.

இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபையின் மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பில் பயிற்சிநெறியொன்றை பெற்றிருந்த சந்துன் பிரதான வீதியையொட்டி இருந்த தனக்கு சொந்தமான காணி ஒன்றின் அரைவாசியை விற்றுப்பெற்ற பணத்தை முதலிட்டு ''சந்துன் மோட்டார் கராஜ்'' என்ற பெயரில் மோட்டார் வாகன திருத்தும் நிலையம் ஒன்றை தனது காணியில் ஆரம்பித்தார். மேலும் அவரது தந்தையிடம் காணப்பட்ட திருத்தல் உபகரணங்கள் அவருக்கு வழங்கியும் வைக்கப்பட்டது. இந்நிலையத்துக்கு அருகாமையில் பிரதான வீதியில் அதிக வாகன போக்குவரத்தும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

1. உற்பத்தியின் அடிப்படையில் ''சந்துன் மோட்டார் கராஜ்'' எவ்வகை வணிகமாகும்?
   1. தனி உடைமை வணிகம்
   2. பொருள் உற்பத்தி வணிகம்
   3. சேவை உற்பத்தி வணிகம்
   4. பங்கு உடைமை வணிகம்

2. இவ்வணிகத்தின் வாய்ப்பு ஒன்றாக கருதக்கூடியது,
   1. சந்துன் மோட்டார் வாகன தொழில்நுட்ப பயிற்சி நெறியை கொண்டிருத்தல்.
   2. சந்துனிடம் காணியொன்றிருத்தல்.
   3. வியாபார நிலையத்துக்கு முன்பாக நாளாந்தம் அதிக வாகனங்கள் பயணித்தல்.
   4. சந்துனின் மூலதன பலம்.

3. ''சந்துன் மோட்டார் கராஜ்'' பதிவு செய்வது தொடர்பில் சரியான கூற்று.
   1. இவ் வணிகத்தை பதிவு செய்வதனால் சட்ட ஆளுமை கிடைக்க பெறும்.
   2. இவ் வணிகத்தை பதிவு செய்வதன் பின் வணிகம் வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்ளலாம்.
   3. இவ் வணிகத்தை பதிவு செய்வதற்கு சந்துன் பிரதேச செயலகத்திற்கு செல்ல வேண்டும்.
   4. பதிவின் பின்னர் வணிகத்தின் நிலைப்புதன்மை உறுதிப்படுத்தப்படும்.

4. சந்துன் வணிகத்தின் பலமாக கருதப்படுவது,
   1. சந்துன் மோட்டார் வாகன திருத்தம் தொடர்பில் பயிற்சி ஒன்றை முடித்திருத்தல்.
   2. வணிக நிலையத்திற்கு முன்பாக அதிக வாகனங்கள் பயணித்தல்.
   3. வணிக நிலையத்திற்குரிய பிரதேசத்தில் மற்றுமொரு வாகன திருத்தும் இடம் காணப்படல்.
   4. நிகழ் காலத்தில் அரசு மோட்டார் வாகன இறக்குமதியை தடை செய்தல்.

- இலக்கம் 5 முதல் 8 வரையிலான வினாக்களுக்கு பின்வரும் சம்பவத்தை வாசித்து விடையளிக்க.

தற்போது இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் வருவதற்கான சிறந்த வழியாக சுற்றுலாத் துறையை தேர்தெடுக்கலாம். இலங்கையை சூழவுள்ள கடற்கரையை இதற்கு பயன்படுத்தலாம். இத்துறை வளர்ச்சியில் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைக்கப்பெறல், வேலை வாய்ப்புகள் உருவாதல், சுற்றுலா விடுதிகள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அடைவதோடு நாட்டில் தற்போது நிலவும் பணவீக்கமும் குறைந்து கடனுக்கான வட்டி வீதம் குறைவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது.

5. மேலுள்ள சம்பவத்திலிருந்து பொருளாதார சூழல் காரணங்களை கொண்ட தொகுதி
   1. கடற்கரை, அந்நிய செலாவணி 2. வேலை வாய்ப்பு, அந்நிய செலாவணி
   3. பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணி 4. சுற்றுலா விடுதி, கடற்கரை

6. மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட ''நிலம்'' என்ற உற்பத்தி காரணிக்கான உதாரணமாக அமைவது,
   1. சுற்றுலா விடுதிகள் 2. கடற்கரை
   3. இயற்கை சூழல் 3. சுற்றுலாத்துறை

7. பணவீக்கம், வட்டி வீதம் போன்ற காரணிகளை உள்ளடக்கிய வணிகச் சூழல்.
   1. பூகோளச்சூழல் 2. தொழில்நுட்பச் சூழல் 3. பொருளாதார சூழல் 4. சட்ட சூழல்

8. சுற்றுலாத்துறை கைத்தொழில் மூலம் பூர்த்தி செய்யப்படும் மனித தேவையானது,
   1. பாதுகாப்பு 2. களியாட்டம்/ஓய்வு 3. தொடர்பாடல் 4.போக்குவரத்து

9. கீழே தரப்பட்டுள்ள X நிரலில் அக்கறை செலுத்தும் கட்சியினர் மற்றும் Y நிரலில் அதற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| I. | முகாமையாளர் | A. வணிக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல். |
| II. | ஊழியர்கள் | B. வணிகத் திட்டங்களை சரியாக அமுல்படுத்துதல். |
| III. | உரிமையாளர் | C. உழைப்புத் திறனை அதிகரித்துக் கொள்ளல். |
| IV. | வழங்குனர் | D. உரிய காலத்தில் மூலப் பொருட்களை வழங்குதல். |

   X மற்றும் Y நிரல் கட்சியினர் மற்றும் அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் அடிப்படையில் ஒழுங்குப்படுத்தி சரியான விடையாக அமைவது,
   1. ACBD 2. CBAD 3. BCAD 4. BCDA

10. வணிகத்தின் அகச்சூழலை கற்பதன் மூலம், அவ்வணிகத்தின்,
   1. வாய்ப்பு அச்சுறுத்தல்களை அறியலாம். 2. பலம், வாய்ப்புகளை அறியலாம்
   3. வாய்ப்பு, பலவீனங்களை அறியலாம் 3. பலம் மற்றும் பலவீனங்களை அறியலாம்

11. A தொழில் வாய்ப்புகளை உருவாக்க முயற்சிப்பதுடன் B தொழில் பாதுகாப்பு தொடர்பில் கரிசனை காட்டுகின்றது, என்பன A,B முறையே,
   1. உரிமையாளர், அரசு 2. அரசு, உரிமையாளர்
   3. அரசு, ஊழியர்கள் 4. முகாமையாளர், ஊழியர்கள்

12. பருமனின் அடிப்படையில் வணிக நிறுவனங்களை வகைப்படுத்தும் விடையாக வருவது
   1. சிறிய அளவிலான வணிகம், பாரிய அளவிலான வணிகம்
   2. அரசு துறை வணிகங்கள், தனியார் துறை வணிகங்கள்
   3. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள், பேரளவிலான வணிகங்கள்
   4. சிறிய வணிகம், பாரிய வணிகம்

13. ''அரசு கூட்டுத்தாபனம்'' அழைக்கப்படும் வேறு பெயர்கள் கொண்ட தொகுதி,
   1. அரச கம்பனி, சபை, அதிகாரசபை, அமைச்சு
   2. சபை, ஆணைக்குழு, அதிகாரசபை, பணியகம்
   3. திணைக்களம், அரச கம்பனி, ஆனைக்குழு, பணியகம்
   4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, சபை, அதிகார சபை, ஆணைக் குழு

14. சட்ட ஆளுமையுடைய வணிக அமைப்புகளை கொண்ட தொகுதி அல்லாதது
   1. அரசு கூட்டுத்தாசனம், அரச கம்பெனி 2. அதிகார சபை, அரசு சட்ட சபை
   3. அரச கம்பனி, கூட்டுறவு சங்கம் 4. பங்குடைமை, அரசு கூட்டுத்தாசனம்

15. தனி உடைமை வணிகத்தை பதிவு செய்தல் அதிகாரம் காணப்படுவது,

1. பிரதேச செயலாளர் 2. பிரதேச சபை தலைவர்
3. கம்பனி பதிவாளர் 3. உரிய மாகாண சபை வணிக பெயர் பதிவாளர்

16. தனி உடைமை வணிகத்தை பதிவு செய்வதற்கு நாட வேண்டிய இடம் மற்றும் வணிகம் ஆரம்பிக்கப்பட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாட்கள் சரியாக காட்டப்படுவது

1. உரிய மாகாணத்தில் 14 நாட்களுக்குள்
2. பிரதேச சபை 14 நாட்களுக்குள்
3. கம்பனி பதிவாளர் திணைக்களம் 14 நாட்களுக்குள்
4. உரிய பிரதேச செயலகம் 14 நாட்களுக்குள்

17. கணக்கீட்டின் பிரதான நோக்கம்,

1. வணிகம் போதுமான இலாபத்தை பெற்று கொள்கிறதா என்பதை அறிதல்.
2. வணிகத்தின் நிதிநிலைமை சாதகமானதா என்பதை அறிதல்.
3. வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கு தீர்மானம் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
4. சட்டத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்தல்.

18. செலவுகளை மாத்திரம் கொண்ட தொகுதி,

1. கொள்வனவு, செலுத்திய தரகு, முற்பன வீட்டு வாடகை
2. பற்று, மின்சார செலவு, தொலைபேசி கட்டணம்
3. முதலீடு, வரிப்பணம், போக்குவரத்து செலவு
4. வரிப்பணம், கட்டிட திருத்தச் செலவு, கூலி மற்றும் சம்பளம்

19. பற்று என்பது,

1. சொத்துக்கணக்காகும் 2. செலவுக்கணக்கு ஆகும்
3. வருமானக்கணக்காகும் 4. மூலதனக்கணக்காகும்

20. யாதாயினும் சொத்தொன்று அல்லது பொறுப்பொன்று கணக்கேடுகளில் பதிவதற்கு சொத்தொன்றின் கிரயம், பொறுப்பொன்றுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி தொடர்பான சரியான கூற்று

1. கடந்த கால கொடுக்கல் வாங்கல்களின் பெறுபேறாகும்.
2. நம்பிக்கையுடன் அளவிடக்கூடியதாக காணப்படல்.
3. வணிகத்தினால் கட்டுப்படுத்த கூடியதும் நிகழ்கால கட்டுப்பாடுகளுடன் காணப்படும்.
4. நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதது என வகைப்படுத்தக் கூடியதாக இருத்தல்.

21. வணிகம்மொன்று தொடர்பான தகவல்கள் சில பின்வருமாறு,

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| விற்பனை | 50,000 | பற்று | 5,000 |
| மேலதிக மூலதனம் | 20,000 | பெற்ற கழிவு | 2,000 |
| மின்சார செலவு | 5,000 | | |
| கொள்வனவு | 25,000 | | |

மேலுள்ள வணிகத்தின் இலாபமாக அமைவது,

1. ரூ.37,000 2. ரூ.22,000 3. ரூ 35,000 4. ரூ. 47,000

22. 2023.10.01 தினத்தன்று காணப்பட்ட கணக்கீட்டு சமன்பாடு வருமாறு.

சொத்துக்கள் = உரிமை + பொறுப்பு
170,000 = 120,000 + 50,000

- நிறுவனத்தின் உரிமையாளர் தனது சொந்த காசில் கடன் கொடுத்தோருக்கு 20,000/- செலுத்திய பின்னரான கணக்கிட்டு சமன்பாடானது

1. 150,000 = 120,000 + 30,000 2. 170,000 = 140,000 +30,000
3. 150,000 = 100,000 + 50,000 4. 170,000 = 100,000 + 70,000

- கீழே உள்ள தகவல்களை வாசித்து இல.23 முதல் 24 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
    - A. வணிகப் பயன்பாட்டிற்காக ரூ.100,000 பெறுமதியான காரியாலய உபகரணங்கள் கொள்வனவு.
    - B. உரிமையாளர் பற்று காசு.
    - C. ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவு.
    - D. வங்கிக் கடன் ஒன்றைப் பெறல்.

23. சொத்தொன்று அதிகரித்து சொத்தொன்று குறைவடையும் கொடுக்கல் வாங்கலானது.
    1. A    2. B    3. C    4. D

24. உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக அமைவது
    1. A மற்றும் B    2. B மற்றும் C    3. C மற்றும் D    4. B மற்றும் D

25. வணிக உரிமையாளரின் பொருள் பற்று ரூ.10,000 ஆகும். இதற்கான இரட்டைப் பதிவாக அமைவது,
    1. பொருள் கணக்கு வரவு 10,000
       இருப்பு கணக்கு செலவு 10,000
    2. பற்று கணக்கு வரவு 10,000
       கொள்வனவு கணக்கு செலவு 10,000
    3. கொள்வனவு கணக்கு வரவு 10,000
       பற்று கணக்குச் செலவு 10,000
    4. இருப்பு கணக்கு வரவு 10,000
       பற்று கணக்குச் செலவு 10,000

- கீழே உள்ள தகவல்களை வாசித்து இல.26 முதல் 27 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.
  அமல் வணிகத்தின் 2023.01.01 தினத்தன்று காணப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் மீதிகள் வருமாறு.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| காணி கட்டிடம் | 50,000 | கடன்கொடுத்தோர் | 50,000 |
| மோட்டார் வாகனம் | 40,000 | வங்கிக்கடன் | 200,000 |
| இருப்பு | 100,000 | | |
| கடன்பட்டோர் | 50,000 | | |

வணிகத்தின 2023 ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு
A - ரூ 50,000 பெறுமதியான இருப்புக்கள் ரூ 70,000 விற்பனை
B - செலுத்திய சம்பளம் ரூ.25,000
C - உரிமையாளர் பற்று ரூ.10,000
D - ரூ.2000 வட்டி உட்பட வங்கிக்கடன் தவணைக்கட்டணம் செலுத்தியது 20,000/=

26. மேற்படி கொடுக்கல் வாங்கல் இன் பின்னர் அமல் வியாபாரத்தின் சொத்துக்கள் ஆனது
    1. ரூ.37,000    2. ரூ.783,000    3. ரூ.837,000    4. ரூ.80,000

27. மேலுள்ள மற்றும் ஆகிய கொடுக்கல் வாங்கல்களினால் வணிகத்தின் சொத்துக்களில் ஏற்படும் தாக்கம்
    1. சொத்துக்கள் ரூ.70,000 இனால் அதிகரிக்கும்.
    2. சொத்துக்கள் ரூ.105,000 இனால் குறையும்.
    3. சொத்துக்கள் ரூ.35,000 இனால் குறையும்.
    4. சொத்துக்கள் ரூ.175,000 இனால் அதிகரிக்கும்.

28. வணிகம் ஒன்றின் சொத்துக் கணக்குகளில் மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?

1. வங்கி கடன் ரூ.20,000 மீள் செலுத்தல்.
2. சில்லறைக்காசளனுக்கு ரூ.10,000 முற்பணம் கொடுத்தல்.
3. ரூ.100,000 பெறுமதியான கணணியொன்றை அபான்ஸ் (Abans) நிறுவனத்திடம் கொள்வனவு செய்தல்.
4. ரூ.50,000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு

29. அதிகரித்தல் 'வரவு' குறைதல் 'செலவு' என்ற இரட்டை பதிவிற்கு உட்பட்ட கூடியது

1. சொத்துக்கள், வருமானங்கள்
2. சொத்துக்கள், உரிமைகள்
3. சொத்துக்கள், செலவுகள்
4. சொத்துக்கள், பொறுப்புக்கள்

30. நந்தன வணிகம் ரூபா 50,000 பெருமதியான பொருட்கள் தொகுதி ஒன்றை கொள்வனவு செய்தல் தொடர்பான இரட்டை பதிவாக அமைவது ?

1. இருப்பு கணக்கு வரவு 50,000
   காசு கணக்கு செலவு 50,000
2. இருப்பு கணக்கு வரவு 50,000
   கடன் கொடுத்தோர் கணக்கு செலவு 50,000
3. கொள்வனவு கணக்கு வரவு 50,000
   காசு கணக்குச் செலவு 50,000
4. கொள்வனவு கணக்கு வரவு 50,000
   கடன்பட்டோர் கணக்குச் செலவு 50,000

31. வணிகம் ஒன்றில் முதன்மை ஏடுகளாக பதியப்பட்டுள்ள இரு கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

- சில்லரை காசாளனுக்கு செலுத்துதல் ரூ.10,000 (முற்பணம்)
- கடன்பட்டோரிடம் பெறுவனவு ரூ.20,000

மேற்படி கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணங்கள் முறையே,

1. சில்லறை காசேட்டு கைச்சாத்து, பற்றுச்சீட்டு.
2. கைச்சாத்து, பற்றுச்சீட்டு.
3. கைச்சாத்து, விற்பனை பட்டியல்.
4. சில்லறை காசேட்டு கைச்சாத்து, கைச்சாத்து

32. கொள்வனவு நாளேட்டில் பதியப்படுவது,

1. நடைமுறையல்லா சொத்துக்கள் கடனுக்கு கொள்வனவு.
2. காசிற்கு கொள்வனவு.
3. வியாபாரப் பொருட்கள் கடனுக்கு கொள்வனவு.
4. தளபாடங்கள் காசிக்கு கொள்வனவு.

33. நாட்குறிப்புச்சாத்து மூலம் ஆவணமாக பயன்படுத்தப்படும் முதன்மை ஏடு?

1. வங்கிக் கணக்கு
2. விற்பனை நாளேடு
3. பொது நாட்குறிபபேடு
4. காசேடு

34. காசேட்டின் இரட்டைத் தொழிற்பாடு எனப்படுவது?

1. காசு பெறுவனவு, காசு கொடுப்பனவை பதிதல்.
2. பேரேட்டு கணக்கின் தொழிற்பாடு மற்றும் சொத்துக்கணக்கின் தொழிற்பாடு.
3. முதன்மை ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படல்.
4. சொத்துக்கணக்காகவும் நிதிக்கணக்காகவும் தொழிற்படல்.

35. வியாபார கழிவு தொடர்பான சரியான கூற்று

1. வியாபாரக் கழிவு கணக்குகளில் பதியப்படும்.
2. வியாபாரக் கழிவு கணக்குகளில் பதியப்படுவதில்லை.
3. கடன்பட்டோரிடம் காசு பெறுவனவின் போது வழங்கப்படும்.
4. கடன்கொடுதொருக்கு காசு செலுத்தும் போது பெறப்படும்.

36. கழிவுக்கணக்கானது ?

1. சொத்து மற்றும் பொறுப்புக்களை கொண்டாகும்.
2. சொத்து மற்றும் உரிமைக் கணக்கு ஒன்றாகும்.
3. பொறுப்பு மற்றும் உரிமை கணக்கு ஒன்றாகும்.
4. வருமானம் மற்றும் செலவு கணக்கு ஒன்றாகும்.

37. சரியான இரட்டை பதிவு தெரிவு செய்க

1. காசு கணக்கு வரவு 8,100
கொடுத்த கழிவு கணக்கு வரவு 900
கடன் பட்டோர் கணக்கு செலவு 9,000

2. கடன் பட்டோர் கணக்கு வரவு 9,000
காசு கணக் செலவு 8,100
கொடுத்த கழிவு செலவு 900

3. காசு கணக்கு வரவு 8,100
பெற்ற கழிவு கணக்கு வரவு 900
கடன் கொடுத்தோர் கணக்கு செலவு 9,000

4. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு 9,000
கொடுத்த கழிவு செலவு 900
காசு கணக் செலவு 8,100

38. வணிகம் ஒன்றின் தினத்தன்று காணப்பட்ட காசி மீதி ரூ125,000 அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் வருமாறு

- சம்பளக் கொடுப்பனவு ரூ. 20,000
- பொருள் பற்று ரூ. 5,000
- மொஹம்மடிடம் பொருள் கொள்வனவு ரூ. 40,000
- வட்டி வருமானம் பெற்றுத ரூ. 10,000

மேற்படி கொடுக்கல் வாங்கல் பின்னர் காசி மீதியாவது?

1. ரூ.70,000 2. ரூ.110,000 3. ரூ.115,000 4. ரூ.55,000

39. சில்லறை காசேட்டில் பேரேட்டு கணக்கு என்று நிழலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

1. போக்குவரத்துச் செலவு / கடன் கொடுத்தவனுக்கு செலுத்தியது / சிறிய பெறுமதி சொத்துக் கொள்வனவு
2. ஊழியர் சம்பளம் முற்பணம் / கடன் கொடுத்தோருக்கு கொடுத்துத / போக்குவரத்து செலவு
3. கடன் கொடுத்தவருக்கு செலுத்தியது / உட்சுமைக்கூலி / சிறிய பெறுமதியுடைய சொத்துக்கள் கொள்வனவு
4. நானா வித செலவுகள் / கடன் கொடுத்தோருக்கு செலுத்துதல் / உட்சுமைக் கூலி

40. வணிகமொன்றின் 2023.09.01 திகதியன்று சில்லறை காசோட்டு மீதி ரூ.400 செப்டம்பர் மாதம் சில்லறை காசாளனுக்கு செலுத்திய மொத்தம் ரூ.9200. 2023.09.30 தினத்தன்று சில்லறைக் காசாளனிடம் இருந்த மீதி ரூ.800 ஆகும். 2023 செப்டம்பர் மாத சில்லறைச் செலவுகளின் மொத்தம் எவ்வளவு ?

1. 8800/= 2. 9200/= 3. 9600/= 4. 10,000/=

மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம் மத்துகம கல்வி வலயம்

# மத்துகம கல்வி வலயம்

## இரண்டாம் தவணை பரீட்சை - 2023

| தரம் 10 | வணிகமும் கணக்கீடும் | பகுதி II | நேரம் - **02** மணி |
|---|---|---|---|

பரீட்சைச் சுட்டெண்........................................................................................

**அறிவுறுத்தல்கள்**

- முதலாம் வினா உட்பட பகுதி I இல் இரு வினாக்களையும் பகுதி II இல் இரு வினாக்களையும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- அறிவுறுத்தலுக்கிணங்க ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டப்படாத விடத்து புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**1.** பின்வரும் சம்பவத்தை வாசித்து இல. I தொடக்கம் X வரையிலான வினாக்களுக்கு விடையளிக்க.

அபிவிருத்தி சபையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற முயற்சியாண்மை டிப்ளோமாதாரி, யாழ்பாணத்தைச் சேர்ந்த ஞானம் சிவாஜிலிங்கம் பனங்கருப்பட்டி மற்றும் பனம்பாணி கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றை வாடகைக்கட்டிடமொன்றில் ''சிவா பனம் உற்பத்திகள்'' எனும் பெயரில் ஜனவரி மாதம் 01ஆம் திகதி 2023இல் ஆரம்பித்தார். அவர் யாழ்ப்பாண பிரதேச உற்பத்திகளை கொள்வனவு செய்து பிரதானமாக இலங்கையில் மேல், தென், மத்திய, மற்றும் வட மத்திய மாகாணங்களில் விநியோகிக்கிறார்.

இம்மாகாணங்களில் பனம் உற்பத்திகளுக்கு பாரியளவில் கேள்வி காணப்படுகிறது. இதற்காக 2023 ஜனவரி 1 ஆம் திகதி ரூ.50,000/= மாதச் சம்பளத்திற்கு ஊழியரொருவரை ஆட்சேர்த்திருந்தார். இவ்வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஜனவரி 01 ரூ.500,000/= காசும், ரூ.15 00 000/= பெறுமதியான சிறிய லொறியொன்றும் வணிகத்திற்கு மூலதனமாக இடப்பட்டது. அத்தினம், நிதித்தேவை காரணமாக ஹட்டன் நஷனால் வங்கியில் (Hatton National Bank PLC)
ரூ. 250,000/= வங்கிக்கடனொன்று (12% வருட வட்டியில்) பெறப்பட்டது.

ஜனவரி 02 மூலப்பொருள் கொள்வனவு ரூ.15,000/=
ஜனவரி 03 பொருட்கள் காசிற்கு கொள்வனவு ரூ.300,000/=
ஜனவரி 04 பெற்றோல் செலவுகள் ரூ. 12 000/=
ஜனவரி 05 காசிற்கு விற்பனை ரூ.200,000∴ஸ்ரீ கடன் விற்பனை ரூ. 60,000/=
ஜனவரி 10 கடனுக்கு பொருட்கொள்வனவு ரூ.200,000/=
ஜனவரி 12 கடனுக்கு விற்பனை ரூ.300,000/=
ஜனவரி 15 வாடகை செலுத்தியது ரூ. 30,000/=
ஜனவரி 18 உரிமையாளர் காசுப்பற்று ரூ. 10,000/=
ஜனவரி 20 உடன் காசு விற்பனை ரூ.350,000/=
ஜனவரி 20 கடன்பட்டோர் தந்த காசு ரூ. 250,000/=
ஜனவரி 25 கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூ.150,000/=
ஜனவரி 30 ஊழியர் சம்பளம் செலுத்தியது ரூ.50,000/=
ஜனவரி 31 வங்கிக்கடன் தவணைப்பணம் செலுத்தியது ரூ. 12500/= வட்டி செலுத்தியது ரூ.2 500/=

இலங்கையில் மேலே குறிப்பிட்ட மாகாணங்களில் பனங்கருப்பட்டி மற்றும் பனம்பாணி போன்றே கித்துள் கருப்பட்டி, கித்துள் பாணி தொடர்பிலும் பாரிய கேள்வி காணப்படுகிறது. இவ்வுற்பத்திகளுக்கிடையிலான போட்டிநிலைமைக்கும் ஞானம் முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

பனம் அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்ட பயிற்சி மற்றும் உதவிகள் ஞானம் அவர்களுக்கு பெரும் உந்துசக்தியாக அமைந்தது. நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடியும் ஞானம் சிவாஜிலிங்கத்தின் வணிகத்தை பாரியளவில் பாதித்தும் உள்ளது.
இவ்வணிகத்தில் 2023 ஜனவரி 31ல் இருப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. (கொள்வனவு செய்தவை அனைத்தும் விற்பனையாகியுள்ளன)

I. (அ) இவ்வணிகம் மூலம் பூர்த்தி செய்யப்படும் மனிதத்தேவை எது?
(ஆ) அத்தேவையை பூர்த்தி செய்து கொள்ள மேற்கொள்ளப்படும் உற்பத்தி யாது?

II. (அ) சிவாஜிலிங்கம் வவணிகத்தின் பெயரை பதிவு செய்தல் கட்டாயமா ?காரணம் தருக.
(ஆ) பதிவு செய்ய வேண்டி இருப்பின் அவர் செல்ல வேண்டிய இடம் யாது?

III. (அ) சிவாஜிலிங்கம் வணிகம் எதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தல் ஒன்றைத் தருக ?.
(ஆ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனி மனித அந்தஸ்துடைய அரச துறை மற்றும் தனியார் துறை வணிகங்கள் இரண்டினைப் பெயரிடுக?

IV. ஞானம் சிவாஜிலிங்கத்திடம் காணப்படும் பலம் வாய்ப்பு மற்றும் அச்சுறுத்தல் ஒவ்வொன்று வீதம் தருக

V. 2023 ஜனவரி 1ஆம் திகதி சிவாஜிலிங்கம் வணிகத்தின் அடிப்படை கணக்கீட்டு சமன்பாட்டை எழுதிக்காட்டுக

VI. வங்கிக்கடன் பெறல் தொடர்பான இரட்டைப்பதிவினை பெறுமதியுடன் எழுதிக்காட்டுக.

VII. சிவா பனம் உற்பத்திகள் வணிகம் 2023 ஜனவரி 31 ஆம் திகதி கடன்பட்டோர் மீதி, கடன்கொடுத்தோர் மீதிகளைத் தனித்தனியாக கணிப்பிடுக

VIII. சிவா பணம் உற்பத்திகள் வணிகத்தின் 2023 ஜனவரி மாத காசு மீதி கணிப்பிடுக

IX. சிவா பணம் உற்பத்திகள் வணிகத்தின் 2023 ஜனவரி மாத இலாபத்தை கணிப்பிடுக

X. 2023 ஜனவரி 31ஆம் திகதியன்று ஞானம் சிவாஜிலிங்கம் சார்ந்துள்ள உரிமையை கணிப்பிடுக

(2 புள்ளி வீதம் மொத்தம் 20 புள்ளிகள் )

**2.**

I. (அ) வணிகமொன்றின் பிரதான நோக்கங்கள் இரண்டு தருக.

(ஆ) அடிப்படை மனித தேவைகள் மூன்றைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள் )

II. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.

(அ) மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவைகளை பூர்த்திசெய்து கொள்ள வேண்டியது கட்டாயமாகும். விருப்பங்கள் அவ்வாறன்று.

(ஆ) கட்டடங்கள் நிலம் என்ற உற்பத்திக் காரணிக்குரியதாகும்

(இ) இடர்களை ஏற்றல் உழைப்பு என்ற உற்பத்திக்காரணியின் பிரதான பண்பாகும்.

(ஈ) உரிமையாளரின் பிரதான நோக்கம் தூளில் விருத்தி மற்றும் தொழில் திருப்தி ஏற்படுத்த்துவதாகும்

(2 புள்ளிகள்)

III. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் (லக் விஜய மின் நிலையத்தில்) மின் உற்பத்தியில் பயன்படுத்தி எஞ்சிய நிலக்கரி சாம்பல்களை கொள்வனவு செய்து அவற்றை பயன்படுத்தி கட்டடக்கல் (சீமெந்துக் கல் போன்று ) உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றை நடத்தி வரும்

வரையறுக்கப்பட்ட AAC கம்பெனியின் வாடிக்கையாளர்களாக இலங்கை கட்டிட நிர்மாணத்துறையில் காணப்படும் முன்னணி நிறுவனங்கள் திகழ்கின்றன. இக் கல் உற்பத்தியின் நிறை குறைவு, குறைந்த கிரயம் என்பன உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் அதிக கேள்வியை எழுப்பியுள்ளன.

வெளிநாட்டு வாடிக்கையாளராக மாலைதீவிலிருந்து அதிக வாடிக்கையாலாளர்களிடம் இருந்து கட்டளைகள்பெறப்பட்டுள்ளன.இதற்காகஇலங்கை அரசினால் விசேட ஊக்கப்படுத்தல் நடவடிக்கைகளாக வரிச் சலுகைகள் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக நிறுவன ஊழியர் முதல் முகாமையாளர்கள் வரை பல தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(அ) மேற்படி குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட AAC நிறுவனத்தில் அக்கறையுடைய இரு தரப்பினர்களை குறிப்பிடுக.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட தரப்பினர்களிடம் வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புகள் ஒவ்வொன்று தருக.

(2 புள்ளிகள்)

IV. (அ) வணிகச் சூழல் என்றல் என்ன

(ஆ) வணிகமொன்றின் பலம் மற்றும் பலவீனங்கள் தோன்றுவது இவ்வணிகச் சூழலில் என்பதைக் குறிப்பிட்டு அவ்வணிகச் சூழலுக்குரிய கட்சியினர்களைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(08 புள்ளிகள்)

**3.**

I. (அ) வணிக அமைப்பு என்றால் என்ன?

(ஆ) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் வணிகங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம் என்பதை எழுதிக்காட்டுக.

(2 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக்கூறுக

(அ) அரச துறை வணிகங்களில் அரச கம்பனிகள் இலாபத்தை நோக்கமாக கொண்டுள்ளது.

(ஆ) வணிகமொன்றின் அகச்சூழலைக் கற்பதன் மூலம் பலம் மற்றும் வாய்ப்புக்களை அறிந்து கொள்ள முடிவதுடன் புறச்சூழலை கற்பதனூடாக பலவீனம் மற்றும் அச்சுறுத்தல்களை அறியலாம்.

(இ) தனிமனித அந்தஸ்து என்பது சட்டத்தின் முன்னிலையில் சட்டரீதியான தனியாளாக வணிகம் கருதப்படுவதாகும்.

(ஈ) கூட்டுறவு சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கு குறைந்தது 7 நபர்கள் காணப்படல் வேண்டும்.

(2 புள்ளிகள்)

III. (அ) பங்குகளை வழங்குவதன் மூலம் மூலதனத்தை திரட்டிக் கொள்ளக் கூடிய இலங்கையில் காணப்படும் பாரியளவிலான வணிக அமைப்பைக் கூறுக.

(ஆ) தனியுடைமை வணிகமொன்றை பதிவு செய்யும் போது பெற்றுக்கொள்ளவேண்டிய இரு விண்ணப்பங்களும் எவை?

(2 புள்ளிகள்)

IV. (அ) சட்டத்தேவைப்படுகளின் போது நிறுவனத்தலைவர் தனது பதவிப் பெயரில் ஆஜராக வேண்டிய வணிக அமைப்பு வகை எது?

(ஆ) இலாபத்தை நோக்காக கொண்டிராத தனியார்துறை வணிக அமைப்பொன்றையும் அரசதுறை வணிக அமைப்பொன்றையும் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

**4.**

I. வணிகமொன்றுக்கு காணப்படும் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் ஒவ்வொன்று வீதம் தருக. (2 புள்ளிகள்)

II. கடந்த ஆண்டில் இலங்கை பொருளாதாரத்திற்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்திய பொருளாதாரச்சூழல் காரணிகள் 4 ஐ பெயரிடுக.
(2 புள்ளிகள்)

III. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக

(அ) பங்குடைமை தொடர்பில் தாக்கம்செலுத்தும் சட்டம் 2007ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டமாகும்.

(ஆ) பங்குடைமை ஒப்பந்தம் வாய்மொழி மூலம், எழுத்து மூலம், நடத்தை மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம்

(இ) குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தின் படி பங்குடைமை ஒன்றில் உச்சபங்காளர் எண்ணிக்கை 20 ஆகும்.

(ஈ). தனியுடைமை வணிகத்தை பதிவு செய்வதனால் அவ்வணிகத்திற்கு சட்ட அந்தஸ்த்து கிடைப்பதில்லை
(2 புள்ளிகள்)

I. தனியுடைமை வணிகமொன்றொடு ஒப்பிடுமிடத்து பங்குடைமை வணிகமொன்றின் அனுகூலங்கள் இரண்டையும் பிரதிகூலங்கள் இரண்டையும் குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II - கணக்கீடு

(இரு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்)

**5.**

I. (அ) வருமானம் என்பது யாது? (1 புள்ளி)

(ஆ) பின்வரும் விடயங்களை சொத்து, பொறுப்பு, உரிமை, வருமானம், செலவு ஆகிய வகையினுள் உள்ளடக்கிக் காட்டுக.

கொள்வனவு, கொடுத்த விற்பனை தரகு, உட்சுமைக்கூலி, வெளிச்சுமைக் கூலி, விற்பனைக்கிரயம், சில்லறைக் காசேட்டு மீதி, பற்று, பெற்ற வட்டி, வாடகைச் செலவு, வங்கி மேலதிகப்பற்று, செலுத்த வேண்டிய மின்சாரச் செலவு, கடன்பட்டோர், வங்கிக்கடன், மூலதனம், விற்பனை, பெறவேண்டிய கடன் பெறுமதி.

(4 புள்ளிகள்)

II. 2022 டிசம்பர் மாதத்தின் குமார வணிகத்தின் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றது. இத்தகவல்களை கருதிற்கொண்டு 2023.12.31 இல் உள்ளவாறு உரிமையாளரின் உரிமை மீதியை கணிப்பீடுக.

| | ரூபா |
|---|---|
| 2022.12.01 மூலதனம் | 45,0000 |
| டிசம்பர் மாத வணிக நட்டம் | 45,000 |
| மேலதிக மூலதனம் | 75,000 |
| உரிமையாளர் பற்றிய பொருட்கள் | 6,000 |
| காசு | 5,000 |

டிசம்பர் 15ம் திகதி ரூ.300,000/- பெறுமதியான சொந்த மோட்டார் சைக்கிளை உரிமையாளர் வணிகபயன்பாட்டிற்கு வழங்கியிருந்தார்.

(2 புள்ளிகள்)

III. கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை வாங்கல்களை தரப்பட்டுள்ள மாதிரி கணக்கிட்டு சமன்பாட்டில் பதிந்து காட்டுக

2022.12.01 உரிமையாளர் காசாக ரூ.250,00/- மற்றும் ரூ.400,000 பெறுமதியான சொந்த கட்டிடம் ஒன்றை வணிகத்தில் ஈடுபடுத்தினார்.

2022.12.01 ரூ.120,00/- பெறுமதியான வங்கிக் கடன் 1வருட கால முதிர்வில் பெறப்பட்டது.

2022.12.05 ரூ.75,00/- பெறுமதியான பொருட்கள் விற்பனை நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டது. இதில் ரூ.50,000/- காசு செலுத்தியும் மிகுதி கடனாகவும் கொள்வனவு செய்யப்பட்டது.

2022.12.10 காசிற்கு விற்பனை ரூ.120,00/- இவ் விற்பனை பொருட்களின் கிரயம் ரூ.120,00/- ஆகும்.

2022.12.15 மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ.5,000/-

2022.12.25 உரிமையாளர் தனது சொந்த காசில் கடன் கொடுத்தோருக்கு ரூ.20,000/- செலுத்தினார்.

2022.12.30 உரிமையாளர் பற்றிய பொருட்களின் பெறுமதி ரூ.5,000/- பற்றிய காசு ரூ.3,000/- ஆகும்.

2022.12.31 வங்கிக்கடன் தவணைப்பணமாக வட்டி உட்பட ரூ.11,000/- செலுத்தப்பட்டது.

(5 புள்ளிகள்)

**மாதிரி கணக்கீட்டுச் சமன்பாடு**

| திகதி | கட்டிடம் + | இருப்பு + | கடன்பட்டோர் + | காசு = | மூலதனம் + | வாங்கிக்கடன்+ | கடன் கொடுத்தோர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**6.**

I. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவை தொகைகளுடன் எழுதிக் காட்டுக.

A. உரிமையாளர் பற்றிய பொருட்கள் ரூ 10,000
B. ரூ 300000 பெறுமதியான வங்கிக்கடன் மஹஜன வங்கியிலிருந்து பெறப்பட்டது.
C. ரூ 100000 பெறுமதியான பொருட்தொகுதியொன்று கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
D. வங்கிக்கடன் தவணைகட்டணமாக ரூ 25,000 மற்றும் வட்டியாக ரூ 3000 செலுத்தப்பட்டது.

(4 புள்ளிகள்)

II. பின்வரும் முதன்மை ஏடுகளுக்குரிய மூல ஆவணங்களை குறிப்பிடுக.

| **மூல ஏடுகள் / முதன்மை ஏடுகள்** | **மூல ஆவணங்கள்** |
|---|---|
| காசேடு | ........................................... |
| வங்கி கணக்கு | ........................................... |
| சில்லறைக் காசேடு | ........................................... |
| விற்பனை நாளேடு | ........................................... |
| கொள்வனவு நாளேடு | ........................................... |
| பொது நாட்குறிப்பு | ........................................... |

(3 புள்ளிகள்)

III. சமன் லீ வணிகத்தின் 2023.09.01 திகதியன்று காணப்பட்ட மீதிகள் வருமாறு

| | ரூ |
|---|---|
| கடன்பட்டோர் | 60 000 |
| கடன்கொடுத்தோர் | 40 000 |
| காசுமீதி | 50 000 |

**2023 செப்டம்பர் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் வருமாறு.**

செப்டம்பர் 10 கடன் பெற்றோர் தந்த காசு ரூ.19,000 கொடுத்த கழிவு ரூ.1,000

செப்டம்பர் 15 கடன் கொடுத்தோருக்கு கொடுத்தது ரூ.28,500 பெற்ற கழிவு ரூ.1500

செப்டம்பர் 20 கடன்பட்டோரிடமிருந்து ரூ.10,000 கடனை பெறும்போது 5% கழிவு வழங்கப்பட்டது.

செப்டம்பர் 25 கடன் கொடுத்தவருக்கு ரூ.10,000 கடன் செலுத்துகையில் 5%கழிவு பெறப்பட்டது.

**மேற்படி கொடுக்கல் வாங்கல்களை காசு கணக்கில் மற்றும் உரிய பேரட் கணக்கு பதிந்து சமப்படுத்தி காட்டுக.**

(5 புள்ளிகள்)

**7.**

I. ரவி வணிகத்தின் 2023 செப்டம்பர் மாதத்திற்குரிய தகவல்கள் வருமாறு.

2023.09.01 திகதியிலுள்ள மீதிகள்

| | ரூ |
|---|---|
| காசு | 150,000/= |
| கடன்பட்டோர் | |
| அமல் | 10,000/= |
| விமல் | 15,000/= |
| கடன்கொடுத்தோர் | |
| கமல் | 25,000/= |
| மூலதனம் | 150,000/= |

2023 செப்டம்பர் மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

| திகதி | பற்றுச் சீட்டு இல் | கைச்சாத்து இல | கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|---|
| 2023.09.05 | 25 | - | வங்கி கடன் கடன் பெற்றது ரூ.300,000/- |
| 2023.09.10 | - | 30 | கடன்கொடுநரான கமலுக்கு செலுத்தியது ரூ.15,000/- |
| 2023.09.15 | 26 | - | கடன்பட்டோரான விமலிடம் இருந்து பெற்றது ரூ.20,000/- |
| 2023.09.20 | - | 31 | ஊழியர் சம்பளமாக ரூ.30,000/- செலுத்தப்பட்டது |
| 2023.09.25 | | 32 | பொருட்கள் கொள்வனவு ரூ.50,000/- |
| 2023.09.25 | 27 | | காசு விற்பனை ரூ.80,000/- |
| 2023.09.26 | - | - | உரிமையாளர் பற்றிய பொருட்கள் ரூ.2,000/- |
| 2023.09.30 | 28 | - | விற்பனை ரூ.12,000/- இதற்கான காசோலையொன்று பெறப்பட்டது. |

மேலுள்ள தகவல்களுக்கு இணங்க ரவி வணிகத்தின்

A. காசு கணக்கினை தயாரித்து சமப்படுத்துக.

B. உரிய பேரேட்டு கணக்குகளை தயாரிக்க.

(8 புள்ளிகள்)

II. ஹசான் வணிகத்தின் சில்லறை வசக்கட்டும் பெறுமதி/சில்லறை முற்பனம் ரூ.3,000/ ஆகும். 2023 செப்டம்பர் மாதத்தில் இடம்பெற்ற சில்லறை காசு கொடுக்கல் வாங்கல் கீழ்வருமாறு. 2023 செப்டம்பர் 01 மற்றும் 2023 ஒக்டோபர் 01ம் திகதிகளில் சில்லறைக் காசேடு மீள் நிரப்பப்படும்.

| திகதி | சில்லறை கைச்சாத்து இல | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 2023.09.01 | - | சில்லறைக் காசேடு மீள் நிரப்பப்பட்டது | 2500/= |
| 2023.09.04 | 01 | போக்குவரத்துச் செலவு | 300/= |
| 2023.09.08 | 02 | உபசரிப்பு செலவு | 400/= |
| 2023.09.12 | 03 | பேனை , பென்சில் கொள்வனவு | 200/= |
| 2023.09.16 | 04 | கொள்வனவு எழுதுகருவி | 300/= |
| 2023.09.20 | 05 | தபால் செலவு (முத்திரைகள்) | 100/= |
| 2023.09.24 | 06 | அமாலிக்கு செலுத்தியது | 500/= |
| 2023.09.28 | 07 | போக்குவரத்துச் செலவு (முச்சக்கர வண்டி கூலி) | 300/= |
| 2023.10.01 | - | மீள் நிரம்பல் செய்யப்பட்டது | - |

மேற்படி தகவல்களை தபால் செலவு, எழுதுகருவிகள் செலவு, உபசரிப்பு செலவு , போக்குவரத்துச் செலவு என நான்கு தலைப்புகள் கொண்ட பகுப்பாய்வு நிரலுடைய சில்லறைக் காசேட்டில் பதிந்து காட்டுக.

(5 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

LOL.lk
**BookStore**

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**